Raed More Model Questions - www.winmeen.com

வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முற்றிலும் ஏழாவது தமிழ் சமச்சீர் புத்தகம் செய்யுள் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். விடைகளும் ஒவ்வொரு பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில வினாக்கள் மட்டும் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

ஏழாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள் பகுதிகள்:

1) வாழ்த்து
2) திருகுறள்
3) புறநானூறு
4) முதுமொழிக்காஞ்சி
5) தனிப்பாடல் - (அ) இரட்டுற மொழிதல்
   (ஆ) கல்விக்கு எல்லை இல்லை
6) திரிகடுகம்
7) (அ) திருவாரூர் நான்மணிமாலை
   (ஆ) மெய்ப்பொருள் கல்வி
8) (அ) ஏர்முனை; (ஆ) அம்மானை
9) (அ) பொங்கல் வழிபாடு; (ஆ) உழவின் சிறப்பு
10) முக்கூடற்பள்ளு
11) (அ) எங்கள் தமிழ்
   (ஆ) சீவகசிந்தாமணி

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

# ஏழாவது வகுப்பு தமிழ் - செய்யுள்

## 1) வாழ்த்து

1) 'பண்ணினை இயற்கை வைத்த பண்பனே போற்றி போற்றி - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்?

A] இராமலிங்கனார்

B] நாமக்கல் கவிஞர்

C] தாராபாரதி

D] திரு.வி.க

2) பண் - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] இசை

B] தாளம்

C] ஒழுக்கம்

D] இறைவன்

3) 'வண்மையை உயிரில் வைத்த' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள 'வண்மை' - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] வலிமை

B] வஞ்சகம்

C] கொடைத்தன்மை

D] வளமை

4) திரு.வி.க அவர்கள் பிறந்த ஊர் யாது?

A] தாரமங்கலம்

B] துள்ளம்

C] அரவக்காடு

D] செய்யூர்

5) காஞ்சிபுரத்திலுள்ள துள்ளம் என்னும் ஊரானது தற்போது கீழ்க்கண்டவற்றில் எந்த பெயராக அழைக்கப்பட்டு வருகிறது?

A] துண்டலம்

B] தாரகம்

C] தன்டளம்

D] தண்டலம்

6) தண்டலம் என்ற ஊரானது சென்னைக்கு அடுத்துள்ள எந்த ஊருக்கு மேற்கே அமைந்துள்ளது?

A] காஞ்சிபுரம்

B] பூவிருந்தவல்லி

C] போரூர்

D] திருப்பெரும்புத்தூர்

7) கீழ்க்கண்டவற்றில் யார் தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டார் என்று கூறப்படுகிறார்?

A] திரு.வி.க

B] ஈ.வெ.ராமசாமி

C] மு.வரதராசனார்

D] பாரதிதாசன்

Raed More Model Questions - www.winmeen.com

8) திரு.வி.க அவர்களின் கீழ்க்கண்டவற்றில் எவற்றை போற்றி அவரை தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கின்றனர்?

A] மொழிநடை

B] தமிழ்நடை

C] உரைநடை

D] செய்யுள்நடை

9) திரு.வி.க அவர்கள் கீழ்க்கண்ட எந்தப் பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றினார்?

A] சென்னை கொருக்குபேட்டை வெஸ்லி பள்ளி

B] சென்னை வண்ணாரப்பேட்டை வெஸ்லி பள்ளி

C] சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளி

D] சென்னை குரோம்பேட்டை வெஸ்லி பள்ளி

10) திரு.வி.கலியாண சுந்தரனார் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பெண்ணின் பெருமை

B] மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

C] முருகன் அல்லது அழகு

D] உரிமைக் குறள்

11) திரு.வி.க அவர்களின் பிறப்பு இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1882 - 1952

B] 1883 - 1953

C] 1885 - 1955

D] 1888 - 1958

12) 'பண்ணினை இயற்கை வைத்த பண்பனே போற்றி போற்றி' - எனத் தொடங்கும் பாடலானது திரு.வி.க இயற்றிய கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] பொதுமைவேட்டல்

B] பெண்ணின் பெருமை

C] முருகன் அல்லது அழகு

D] புதுமை வேட்டல்

13) நாடு, மதம், இனம், மொழி, நிறம் அனைத்தையும் கடந்து உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுவதே__எனப்படும்?

A] மொழி வேட்டல்

B] அருள் வேட்டல்

C] பொதுமை வேட்டல்

D] புதுமை வேட்டல்

14) 'பண்ணினை இயற்கை வைத்த பண்பனே போற்றி போற்றி' - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

A] போற்றி

B] தெய்வநிச்சயம்

C] பண்பு

D] பொதுமை

15) பொதுமை வேட்டல் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள மொத்த தலைப்புகள் எத்தனை?

A] 45

B] 43

C] 42

D] 44

16) பொதுமை வேட்டல் நூலில் இடம்பெற்றுள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை யாது?

A] 440

B] 430

C] 420

D] 410

17) திரு.வி.க அவர்கள் இயற்றிய கீழ்க்கண்ட எந்த நூலில் தெய்வநிச்சயம் முதல் போற்றி ஈறாக அமைந்த தலைப்புகளில் பாடல்கள் அமைந்துள்ளன?

A] புதுமை வேட்டல்

B] அருள் வேட்டல்

C] பொதுமை வேட்டல்

D] உரிமை வேட்கை

18) திரு.வி. கலியாணசுந்தரனார் இயற்றிய கீழ்க்கண்ட எந்த நூலைக் கற்றால் கற்பார்க்கு நாடு, மதம், மொழி, இன வேற்றுமைகள் விலுகும், சமுதாய ஒற்றுமை வளரும், மனித நேயம் வளரும், உலகம் தழுவிய ஒருமைப்பாட்டுணர்வு உண்டாகும் என்று கூறப்படுகிறது?

A] பொதுமை வேட்டல்

B] முருகன் அருள் வேட்டல்

C] திருமால் அருள் வேட்டல்

D] சிவனருள் வேட்டல்

19) 'என் கடன் பணி செய்து கிடப்பதே' - என்ற திருவாக்கை தன் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்து வாழ்ந்தவர் யார்?

A] திருநாவுக்கரசர்

B] திரு.வி.கலியாணசுந்தரனார்

C] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

D] துரைமாணிக்கம்

20) 'அன்பே சிவம்' - என்ற உண்மையில் வாழ்க்கை எல்லாம் திளைத்து வாழ்ந்து வந்தவர் யார்?

A] பாரதியார்

B] மு.வரதராசனார்

C] கல்கி

D] திரு.வி.க

21) திரு.வி.க அவர்களின் முன்னோர்கள் அனைவரும் சோழ நாட்டின் கீழ்க்கண்ட எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?

A] திருவாதவூர்

B] திருப்பரங்குன்றம்

C] திருவாரூர்

Raed More Model Questions - www.winmeen.com

D] திருநாவலூர்

22) திரு.வி.க அவர்கள் கீழ்க்கண்ட கல்விமுறைகளை யாரிடம் பயின்றார் என்று சரியாக பொருத்துக

1) தமிழ்க்கல்வி - மருவூர் கணேச சாஸ்திரி;

2) ஆங்கிலக்கல்வி - பாம்பன் சுவாமிகள்;

3) உபநிடதம் - சதாசசிவராவ்;

4) சிவகீதை - நா.கதிரைவேற்பிள்ளை;

A] 4 3 2 1

B] 1 2 4 3

C] 2 1 3 4

D] 3 4 1 2

23) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது திரு.வி.க அவர்கள் வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்தார்?

A] 1908

B] 1909

C] 1907

D] 1906

24) திரு.வி.க அவர்கள் கீழ்க்கண்ட எந்த இதழில் ஆசிரியராக பணியாற்றவில்லை?

A] தேசபக்தன்

B] நவசக்தி

C] திராவிடன்

D] இந்தியா

25) திரு.வி.க யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை அவர்கள் இறந்த பிறகு கீழ்க்கண்ட யாரிடம் தமிழ்க்கல்வியை பயின்றார்?

A] பாம்பன் சுவாமிகள்

B] ஜஸ்டிஸ் சதாசிவராவ்

C] மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியார்

D] மருவூர் கணேச சாஸ்திரி

26) திரு.வி.க மயிலை தணிகாசல முதலியாரிடம் கீழ்க்கண்ட எந்த நூலை மட்டும் கற்கவில்லை?

A] சிவப்பிரகாசம்

B] இசைநுணுக்கம்

C] சிவஞானபோதம்

D] திருவருட்பயன்

27) திரு.வி.க அவர்கள் யாப்பிலக்கணங்களையும் புராணங்களையும் யாரிடம் கற்றார்?

A] யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை

B] மயிலை தணிகாசல முதலியார்

C] மருவூர் கணேச சாஸ்திரி

D] மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்

28) திரு.வி.க அவர்களின் அரசியல் குரு யார்?

A] கோகலே

B] காந்தி

C] திலகர்

Raed More Model Questions - www.winmeen.com

D] நேதாஜி

29) கீழ்க்கண்டவற்றில் யார் 'புதிய உரைநடையின் தந்தை', 'தமிழ் மேடைப்பேச்சின் தந்தை' - என போற்றப்படுகிறார்?

A] இரா.கிருஷ்ணமூர்த்தி

B] திரு.வி.க

C] பாரதிதாசன்

D] அறிஞர் அண்ணா

30) 'தமிழ்நாட்டுக்கு காந்தியாகவும், தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கு தந்தையாகவும், தொழிலாளர்களுக்கு தாயாகவும் விளங்கினார்' - என்று திரு.வி.க அவர்களை பாராட்டியவர் யார்?

A] தந்தை பெரியார்

B] அறிஞர் அண்ணா

C] மு.வரதராசனார்

D] கல்கி

31) இலக்கியங்களில் 'பிராயணம்' என்னும் சொல்லுக்கு 'செலவு' என்னும் சொல்லை பயன்படுத்தி நிலவிச் செய்தவர் யார்?

A] திரு.வி.க

B] முடியரசன்

C] சி.சு.செல்லப்பா

D] ஆறுமுக நாவலர்

32) 'திரு.வி.க அவர்களின் உள்ளம் எத்தகையது என்று ஒரு நூலால் அறிய வேண்டின், அது பொதுமை வேட்டல் என்னும் இந்த நூல் எனலாம்' - என்று திரு.வி.க நூலை சிறப்பித்துக் கூறியவர் யார்?

A] கவிமணி

B] உ.வே.சா

C] மு.வரதராசனார்

D] சுரதா

விடைகள் - வாழ்த்து

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 8 | B | 15 | D | 22 | A | 29 | B |
| 2 | A | 9 | C | 16 | B | 23 | B | 30 | D |
| 3 | C | 10 | D | 17 | C | 24 | D | 31 | A |
| 4 | B | 11 | B | 18 | A | 25 | C | 32 | C |
| 5 | D | 12 | A | 19 | B | 26 | B | | |
| 6 | C | 13 | C | 20 | D | 27 | A | | |
| 7 | A | 14 | A | 21 | C | 28 | C | | |

## 2) திருக்குறள்

1) வள்ளுவர் அவர்கள் கீழ்க்கண்டவற்றில் எவற்றை வாய்மை எனப்படுகிறார்?

A] மற்றவருக்கு தீங்கு தரும் செயல்களை செய்தல்

B] மற்றவருக்கு தீங்கு தராத சொற்களை பேசுதல்

C] மற்றவருக்கு தீங்கு தரும் சொற்களை பேசுதல்

D] மற்றவருக்கு தீங்கு தராத செயல்களை செய்தல்

2) பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள புரம் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] குற்றம்

B] மயக்கம்

C] பொய்

D] ஏமாற்றம்

3) கீழ்க்கண்டவற்றில் யார் தானம் தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக கருதப்படுவான் என வள்ளுவர் கூறுகிறார்?

A] தன்னிடத்தில் வாய்மையோடு நடப்பவன்

B] மற்றவர் இடத்தில் பொய்மை பேசுபவன்

C] மற்றவர் இடத்தில் வாய்மை பேசுபவன்

D] மனதோடு வாய்மை பேசுபவன்

4) கீழ்க்கண்டவற்றில் யார் 'சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர்' என்று போற்றப்படுகிறார்?

A] திரு.வி.க

B] பாரதியார்

C] வள்ளுவர்

D] கம்பர்

5) வள்ளுவரின் சிறப்பு பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பொய்யா புலவர்

B] முதற்பாவலர்

C] பெருநாவலர்

D] செந்நாப்போதார்

6) திருக்குறள் நூலில் முதல் பிரிவான அறத்துப்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 3 இயல்கள் + 38 அதிகாரங்கள்

B] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 38 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 25 அதிகாரங்கள்

7) இரண்டாம் பிரிவான பொருட்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

B] 3 இயல்கள் + 38 அதிகாரங்கள்

Raed More Model Questions - www.winmeen.com

C] 4 இயல்கள் + 70 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 70 அதிகாரங்கள்

8) திருக்குறளின் கடைசி பிரிவான காமத்துப்பால் பிரிவில் எத்தனை இயல்கள் மற்றும் அதிகாரங்கள் உள்ளன?

A] 3 இயல்கள் + 25 அதிகாரங்கள்

B] 2 இயல்கள் + 25 அதிகாரங்கள்

C] 4 இயல்கள் + 38 அதிகாரங்கள்

D] 3 இயல்கள் + 70 அதிகாரங்கள்

9) அறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள இயல்களில் தவறானது எது?

A] பாயிரவியல்

B] இல்லறவியல்

C] அரசியல்

D] துறவறவியல்

10) பொருட்பாலில் இடம்பெற்றுள்ள இயல்களில் தவறானது எது?

A] களவியல்

B] அரசியல்

C] அங்கவியல்

D] ஒழிபியல்

11) மனிதன் மனிதனாக வாழ, மனிதன் மனிதனுக்குக் கூறிய அறவுரை நூல் எது?

A] சங்ககால நூல்கள்

B] நீதிநூல்கள்

C] திருக்குறள்

D] கம்பராமாயணம்

12) தமிழ்மொழியில் உள்ள அறநூல்கலில் முதன்மையான நூல் எது?

A] இறையனார் அகப்பொருளுரை

B] தொல்காப்பியம்

C] நாலடியார்

D] திருக்குறள்

13) திருக்குறள் நூலானது மொத்தம் எத்தனை நூல்களில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது?

A] 107

B] 117

C] 106

D] 104

14) உலகம் ஏற்கும் கருத்துக்களைக் கொண்டுள்ளதால் திருக்குறள்______என வழங்கப்படுகிறது?

A] முப்பால்

B] உலகப் பொதுமறை

C] உத்ரவேதம்

D] தெய்வநூல்

15) உடலை நீர் தூய்மை செய்யும்; உள்ளத் தூய்மையை வெளிப்படுத்துவது எது?

A] இனியச்சொல்

B] பழிச்சொல்

C] இன்னாச்சொல்

D] வாய்மை

16) கீழ்க்கண்டவற்றில் எவற்றை வள்ளுவர் அகவிருளைப் போக்கும் விளக்கு என்று குறிப்பிடுகிறார்?

A] பொய்பேசாமை

B] புறங்கூறாமை

C] பழிகூறாமை

D] வாய்மைபேசாமை

17) 'பொய்மையும் வாய்மை இடத்த____' - எனத் தொடங்கும் குறளில் விடுபட்ட இடத்தை நிரப்புக?

A] வாய்மை

B] பொய்த்தபின்

C] புரைதீர்ந்த

D] நன்மை

18) 'கற்க கசடறக் கற்பவை கற்றபின்' - என்ற குறளில் இடம்பெற்றுள்ள கசடு என்னும் பொருள் யாது?

A] கல்வி

B] குற்றம்

C] கசப்பு

D] ஒழுக்கம்

19) மனிதர்களுக்கு கீழ்க்கண்டவற்றில் எவை இரண்டும் இரு கண்கள் என வள்ளுவர் கூறுகிறார்?

A] கல்வியும், செல்வமும்

B] செல்வமும், வீரமும்

C] இயலும் இசையும்

D] எண்ணும் எழுத்தும்

20) எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள எழுத்து என்னும் சொல்லின் பொருள் யாது?

A] இலக்கண இலக்கியங்கள்

B] உரைநடைகள்

C] கவிதைகள்

D] கட்டுரைகள்

21) 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்' - எனத் தொடங்கும் குறளில் இடம்பெற்றுள்ள உடையார் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மன்னர்

B] கற்றவர்

C] செல்வந்தர்

D] அமைச்சர்

22) கடையரே கல்லா தவர் - என்று முடிந்த குறளில் இடம்பெற்றுள்ள கடையர் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] உயர்ந்தவர்

B] தாழ்ந்தவர்

C] செல்வந்தர்

D] வணிகர்

23) மாடல்ல மற்றவை யவை - என முடியும் குறளில் இடம்பெற்றுள்ள மாடு என்னும் சொல்லின் பொருள் யாது?

A] பெரிய

B] உலகம்

C] கல்வி

D] செல்வம்

24) ஒருமைக்கண் தான்கற்ற_______ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து - என்ற குறளில் விடுபட்ட இடத்தை நிரப்புக?

A] கல்வி

B] செல்வம்

C] மாட

D] கடைய

25) கீழ்க்கண்டவற்றில் வள்ளுவர் குறிப்பிடும் அழியாச் செல்வம் எது?

A] செல்வம்

B] வீரம்

C] கல்வி

D] புகழ்

விடைகள் - திருக்குறள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 6 | C | 11 | C | 16 | A | 21 | C |
| 2 | A | 7 | D | 12 | D | 17 | C | 22 | B |
| 3 | D | 8 | B | 13 | A | 18 | B | 23 | D |
| 4 | C | 9 | C | 14 | B | 19 | D | 24 | A |
| 5 | A | 10 | A | 15 | D | 20 | A | 25 | C |

## 3) புறநானூறு

1) 'நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே' - எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] புறநானூறு

B] அகநானூறு

C] குறுந்தொகை

D] கலித்தொகை

2) 'நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே' - என்னும் புறநானூற்றுப் பாடலை பாடியவர் யார்?

A] கம்பர்

B] ஔவையார்

C] மோசிகீரனார்

D] கோவூர்கிழார்

3) 'வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள தானை என்னும் சொல்லின் பொருள் யாது?

A] கடமை

B] படை

C] அரசன்

D] உயிர்

4) மோசிகீரனார் அவர்கள் வாழ்ந்த ஊர் யாது?

A] தென்பல்லவ நாட்டிலுள்ள மோசி என்னும் ஊர்

B] தென்சோழ நாட்டிலுள்ள மோசி என்னும் ஊர்

C] தென்சேர நாட்டிலுள்ள மோசி என்னும் ஊர்

D] தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்னும் ஊர்

5) கீரன் என்பது கீழ்க்கண்டவற்றில் எந்த பெயராக குறிப்பிடப்படுகிறது?

A] பண்புபெயர்

B] தனிப்பெயர்

C] குடிப்பெயர்

D] ஊர்ப்பெயர்

6) மோசிகீரனார் உடல் சோர்வினால் முரசுக்கட்டிலில் உறங்கிய போது கவரி வீசிய மன்னன் யார்?

A] சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை

B] சேரமான் இளஞ்சேரல் இரும்பொறை

C] பாண்டியன் நெடுஞ்செழியன்

D] கோப்பெருஞ்சோழன்

7) மோசிகீரனார் அவர்கள் பாடிய பாடல்களானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெறவில்லை?

A] அகநானூறு

B] குறுந்தொகை

C] பரிபாடல்

D] நற்றிணை

8) புறம் என்பது______________எனப்படும்?

A] தவம் செய்தலும் புறம் செய்தலும்

B] மறம் செய்தலும் அறம் செய்தலும்

C] மருள் செய்தலும் அருள் செய்தலும்

D] அறம் செய்தலும் புறம்

9) கீழ்க்கண்ட எந்த நூல்களின் பாடல்கள் மூலம் பண்டைய தமிழக மன்னர்களின் அறவுணர்வு, வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு, கல்விப் பெருமை முதலியவற்றையும் புலவர்களின் பெருமிதம், மக்களிடையே நாகரிகம், பண்பாடு முதலியவற்றையும் அறியலாம்?

A] நற்றிணை

B] அகநானூறு

C] குறுந்தொகை

D] புறநானூறு

10) 'நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே' - என்ற பாடலானது புறநானூற்று நூலில் எத்தனையாவது பாடலாக இடம்பெற்றுள்ளது?

A] புறம் 50 வது பாடல்

B] புறம் 154 வது பாடல்

C] புறம் 156 வது பாடல்

D] புறம் 186 வது பாடல்

விடைகள் - புறநானூறு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | B | 4 | D | 5 | C |
| 6 | A | 7 | C | 8 | B | 9 | D | 10 | A |

Raed More Model Questions - www.winmeen.com

## 4) முதுமொழிக்காஞ்சி

1) முதுமொழிக்காஞ்சி நூலின் ஆசிரியர் யார்?

A] கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

B] புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

C] மதுரை கூடலூர் கிழார்

D] நார்முடிச்சேரல் இளம்பொறை

2) கடல் சூழ்ந்த இவ்வுலக மக்கள் அனைவர்க்கும் கற்றலை விட எது சிறந்தது என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] பொறையுடைமை

B] அன்புடைமை

C] பண்புடைமை

D] ஒழுக்கமுடைமை

Raed More Model Questions - www.winmeen.com

3) கீழ்க்கண்டவற்றில் எவற்றை காதலில் சிறந்தன்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

A] கண்ணஞ்சப் படுதல்

B] கற்றது மறவாமை

C] ஒழுக்கமுடைமை

D] வாய்மையுடைமை

4) அறிவு நுட்பத்தை காட்டிலும் கீழ்க்கண்டவற்றில் எது சிறந்தது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

A] பொய் பேசாமை

B] கற்றது மறவாமை

C] வாய்மையுடைமை

D] பண்புடைமை

5) கீழ்க்கண்டவற்றில் இளமையைக் காட்டிலும் எது சிறந்தது என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] அன்புடைமை

B] வாய்மையுடைமை

C] கற்றது மறவாமை

D] மெய்பிணி இன்மை

6) வளமான வாழ்க்கையை காட்டிலும் கீழ்க்கண்டவற்றில் எவற்றை உடையவராக வாழ்வதே உயர்ந்தது என்று கூடலூர் கிழார் குறிப்பிடுகிறார்?

A] ஒழுக்கம் உடையவராக

B] நாணம் உடையவராக

C] வாய்மை உடையவராக

D] அறிவு உடையவராக

7) 'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள ஆர்கலி என்னும் சொல்லின் பொருள் யாது?

A] நிறைந்த ஓசையுடைய கடல்

B] நிறைந்த ஓசையற்ற கடல்

C] அலைகள் அதிகமுள்ள கடல்

D] அலைகள் குறைவான கடல்

8) மெய்பிணி இன்மை - என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள பிணி என்பதன் பொருள் யாது?

A] உடம்பு

B] நோய்

C] அன்பு

D] கொடை

9) கீழ்க்கண்டவற்றில் உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்பும் நூல் எது?

A] முதுமொழிக்காஞ்சி

B] அறநெறிச்சாரம்

C] நான்மணிக்கடிகை

D] மதுரைக்காஞ்சி

10) முதுமொழிக்காஞ்சி என்னும் நூலின் வேறு பெயர் யாது?

A] அறநூல்

B] அறநெறிச்சாரம்

C] ஆசாரக்கோவை

D] அறவுரைக்கோவை

11) கீழ்க்கண்ட எந்த நூலானது பத்து அதிகாரம், ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து செய்யுள்கள் மற்றும் நூறு பாடல்களால் ஆனது?

A] முதுமொழிமாலை

B] முதுமொழிக்காஞ்சி

C] முகுந்தமாலை

D] மதுரைக்காஞ்சி

12) கீழ்க்கண்ட எந்த நூலில் உள்ள பாடல்களை படித்தால் கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம் பொருள் இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாக கூறி நல்வழிப்படுத்தும்?

A] நீதிநூல்கள்

B] பெருங்கதை

C] முதுமொழிக்காஞ்சி

D] புறநானூறு

13) முதுமொழிக்காஞ்சி நூலில் உள்ள ஒவ்வொரு பதிகமும் கீழ்க்கண்ட எந்த தரவு அடியோடு தொடங்குகிறது?

A] ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்

B] முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தது

C] கழிந்தோர் ஒழிந்தோர்க்கு காட்டிய முறைமை

D] கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தது

14) சிறந்தது எனக் கூறப்படும் பத்துப் பொருளை தன்னகத்தே கொண்டிருப்பது_____பத்து எனப்படுகிறது?

A] தண்டாப் பத்து

B] பழியாப் பத்து

C] அறிவுப் பத்து

D] சிறந்த பத்து

15) முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று - என்ற வரியானது முதுமொழிக்காஞ்சி நூலில் கீழ்க்கண்ட எந்த பதிகத்தில் அமைந்துள்ளது?

A] நல்கூர்ந்த பத்து

B] பொய்ப் பத்து

C] சிறந்த பத்து

D] அல்ல பத்து

16) 'நூறதாம் சிறுபஞ்ச மூலம்; நூறு சேர் முதுமொழிக் காஞ்சி' - என்ற வரி மூலம் முதுமொழிக்காஞ்சி நூலின் பாடல்கள் மொத்தம் நூறு எண்ணிக்கை உடையது என்பதைக் கூறும் வரியானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] பிரபந்த மாலை

B] பிரபந்த தீபிகை

C] இலக்கண விளக்கம்

D] இலக்கணச் சூறாவளி

Raed More Model Questions - www.winmeen.com

17) கீழ்க்கண்ட எந்த நூலானது மூத்தோர் சொற்கள் பலவற்றைக் கோர்த்த கோவை என்று அழைக்கப்படுகிறது?

A] அறவுரைக்கோவை

B] ஆசாரக்கோவை

C] மூதுரை

D] நன்னூல்

18) 'ஆத்திச்சூடியின் முன்னோடி' - என அழைக்கப்படும் நூல் எது?

A] நன்னூல்

B] ஏலாதி

C] சிறுபஞ்சமூலம்

D] முதுமொழிக்காஞ்சி

விடைகள் - முதுமொழிக்காஞ்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 5 | D | 9 | A | 13 | A | 17 | A |
| 2 | D | 6 | C | 10 | D | 14 | D | 18 | D |
| 3 | A | 7 | A | 11 | B | 15 | C | | |
| 4 | B | 8 | B | 12 | C | 16 | B | | |

## 5) தனிப்பாடல்

### (அ) இரட்டுறமொழிதல்

1) 'ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச் சாடும்' - என்ற தனிப்பாடலை பாடிய புலவர் யார்?

A] காளமேகப் புலவர்

B] பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

C] ஔவையார்

D] கபிலர்

2) தெளிந்த சுழியுடைய, பகைவரைத் தாக்கவல்ல, அன்போடு தலை சாய்க்கும் குதிரையானது எந்த மன்னன் நாட்டில் இருப்பதாக காளமேகப் புலவர் குறிப்பிடுகிறார்?

A] விஜயரங்கநாதன்

B] நரசிங்கமுனையன்

C] திருமலைராயன்

D] சொக்கநாதன்

3) காளமேகப் புலவர் எந்த நதியை தம் பாடல்கள் மூலம் குதிரையோடு ஒப்பிடுகிறார்?

A] வைகை

B] காவிரி

C] பொதிகை

D] தண்பொருநை

4) ‘ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச்’ - என்ற வரியில் இடம்பெற்றுள்ள துன்னலர் என்னும் சொல்லின் இரு பொருள்கள் யாது?

A] நல்லவர் அழகிய மலர்

B] கொடியவர், சிறிய மலர்

C] தீயவர், வாடிய மலர்

D] பகைவர், அழகிய மலர்

5) காளமேகப்புலவரின் இயற்பெயர் யாது?

A] சொக்கன்

B] வரதன்

C] மாணிக்கம்

D] துரைமாணிக்கம்

6) காளமேகப்புலவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த கோவில் மடைப்பள்ளியில் சமையல்காரனாக பணிபுரிந்தார்?

A] திருப்பெரம்பத்தூர்

B] திருவில்லிப்புத்தூர்

C] திருவரங்கம்

D] திருவானைக்கா

7) கீழ்க்கண்ட எந்த கோவிலை சேர்ந்த மோகானாங்கி என்பவளிடம் காளமேகப்புலவர் அவர்கள் ஆசைக் கொண்டு இருந்தார்?

A] திருவானைக்கா

B] திருவரங்கம்

C] திருவாமத்தூர்

D] திருவாரூர்

8) காளமேகப்புலவர் அவர்கள் ஆரம்பத்தில் கீழ்க்கண்ட எந்த மதத்தை சார்ந்தவராக இருந்தார்?

A] சைவம்

B] பௌத்தம்

C] வைணவம்

D] சமணம்

9) காளமேகப்புலவர் அவர்கள் மோகனாங்கி மீது கொண்ட காதலால் வைணவ சமயத்தில் இருந்து கீழ்க்கண்ட எந்த சமயத்திற்கு மாறினார்?

A] கிறித்துவம்

B] வைணவம்

C] சமணம்

D] சைவம்

10) காளமேகப்புலவர் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான நூல் எது?

A] திருவானைக்கா உலா

B] திருவரங்கத்து அந்தாதி

C] சரஸ்வதி மாலை

D] பரப்பிரம்ம விளக்கம்

11) 'ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச் சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் - நாடறியத்' - எனத் தொடங்கும் பாடலில் காளமேகப்புலவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இரண்டை சிலேடையாக அமைத்துள்ளார்?

A] குதிரை, காவிரி

B] பாம்பு, வாழைப்பழம்

C] பாம்பு, எள்ளு

D] நாய், தேங்காய்

12) கீழ்க்கண்டவற்றில் யார் இரு பொருள் அமைய நகைச்சுவையுடன் பாடும் வல்லவர் என்று பாராட்டப்படுகிறார்?

A] இராமச்சந்திரக் கவிராயர்

B] இரட்டைப்புலவர்கள்

C] அந்தகக்கவிராயர்

D] காளமேகப்புலவர்

விடைகள் - தனிப்பாடல் - (அ) இரட்டுறமொழிதல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | B | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | C | 9 | D | 10 | B |
| 11 | A | 12 | D | | | | | | |

Raed More Model Questions - www.winmeen.com

## (ஆ) கல்விக்கு எல்லை இல்லை

1) 'கற்றதுகைம் மண்ணளவு கல்லா (து) உலகளவென் (று)' - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்?

A] கபிலர்

B] ஔவையார்

C] காளமேகப்புலவர்

D] இராமச்சந்திரக் கவிராயர்

2) கைம்மண்ணளவு - என்பது கீழ்க்கண்ட எதன் பொருளாக கருதுகின்றனர்?

A] ஒரு சாண் அளவு

B] ஒரு முழம் அளவு

C] ஒரு அடி சாண் அளவு

D] ஒரு அரை சாண் அளவு

3) புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே______எனப்படும்?

A] தனிப்பாசுரத்தொகை

B] சமயருளுரை

C] தனிப்பாடல் தொகுதி

D] தனிப்பாடல் திரட்டு

4) தனிப்பாடல் திரட்டு என்னும் நூலை தமிழ்நாடு முழுவதும் சென்று தேடித் தொகுத்தவர் யார்?

A] இராமநாதபுர மன்னர் பொன்னுசாமி

B] சண்முகநாத கவிராச பண்டிதர்

C] சந்திரசேகர கவிராச பண்டிதர்

D] இராமநாதபுர மன்னர் குழந்தைசாமி

5) தனிப்பாடல் திரட்டு என்னும் நூலை தொகுப்பித்தவர் யார்?

A] சந்திரசேகர முதலியார்

B] இராமநாதபுர மன்னர் பொன்னுசாமி

C] சந்திரசேகர கவிராச பண்டிதர்

D] எட்டயபுர மன்னர் பொன்னுசாமி

6) கீழ்க்கண்டவற்றில் எந்த நூல்களின் பாடல்களை கற்பதனால், தமிழ்மொழியின் பெருமையும் புலவர்களின் புலமையும் சொல்லின்பம் பொருளின்பம் கற்பனை இன்பம் முதலியவற்றை பெறலாம்?

A] தனிப்பாடல்கள்

B] தனிப்பாசுரத்தொகை

C] பிரபந்தமாலை

D] கைக்கிளை

7) கீழ்க்கண்ட எந்த புலவர் மட்டும் ஔவையார் காலத்தில் வாழவில்லை?

A] கம்பர்

B] ஒட்டக்கூத்தர்

C] இளங்கோவடிகள்

D] புகேழந்திப்புலவர்

8) ‘கற்றதுகைம் மண்ணளவு கல்லா (து) உலகளவென் (று) - எனத் தொடங்கும் பாடல் மூலம் ஔவையார் கீழ்க்கண்டவற்றில் எவற்றின் சிறப்பை விளக்குகிறார்?

A] உலகத்தின் சிறப்பு

B] கல்வியின் சிறப்பு

C] மண்ணின் சிறப்பு

D] கலைமகளின் சிறப்பு

விடைகள் - (ஆ) கல்விக்கு எல்லை இல்லை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | A | 3 | D | 4 | C | 5 | B |
| 6 | A | 7 | C | 8 | B | | | | |

Raed More Model Questions - www.winmeen.com

## 6) திரிகடுகம்

1) 'உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்' - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] திருக்குறள்

B] களவழி நாற்பது

C] ஏலாதி

D] திரிகடுகம்

2) நீராடிய பின் உண்ணுதல், பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல், உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல் ஆகிய இம்மூன்றும் மனம், மொழி, மெய்கள் ஆகியவை யாருடைய செயல்கள் என்று நல்லந்துவனார் கூறுகிறார்?

A] அறிவு உடையவரின் செய்கைகள்

B] தூய்மை உடையவரின் செய்கைகள்

C] பண்புடையவரின் செய்கைகள்

D] தூய்மையற்றவரின் செய்கைகள்

3) நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - என்ற வரியில் வழி என்னும் பொருள் தரும் சொல் எது?

A] நெறி

B] நில்லாமை

C] உள்

D] உயிர்

4) தூறு - என்பதன் பொருள் யாது?

A] அழகு

B] வழி

C] புதர்

D] விதை

5) திரிகடுகத்தின் ஆசிரியர் பெயர் யாது?

A] நாதமுனிகள்

B] நக்கீரர்

C] நல்லந்துவனார்

D] நல்லாதனார்

6) நல்லாதனார் எந்த மாவட்டத்தில் உள்ள திருத்து என்னும் ஊரில் பிறந்தார் என்று கூறப்படுகிறது?

A] திருச்சிராப்பள்ளி

B] திருநெல்வேலி

C] திருப்பரங்குன்றம்

D] திருவண்ணாமலை

7) திரிகடுகம் என்னும் நூலானது மொத்தம் எத்தனை வெண்பாக்களை உடையது?

A] 100 வெண்பாக்கள்

B] 101 வெண்பாக்கள்

C] 80 வெண்பாக்கள்

D] 150 வெண்பாக்கள்

8) கீழ்க்கண்ட எந்த மூன்று மருந்துகளால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம் என்று கூறப்படுகிறது?

A] இலவங்கம், சிறுநாவற் பூ, மிளகு

B] சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில்

C] சுக்கு, மிளகு, திப்பிலி

D] பெருமல்லி, இலவங்கம், திப்பிலி

9) எந்த நூலின் பாடல்களில் இடம்பெற்றுள்ள மூன்று கருத்துக்களும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை ஏற்படுத்துகின்றன?

A] ஏலாதி

B] திரிகடுகம்

C] சிறுபஞ்சமூலம்

D] கைந்நிலை

10) எந்த பாடல்களில் உள்ள மூன்று அறக்கருத்தும் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின் மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்கச் செய்யும்?

A] திணைமாலை ஐம்பது

B] சிறுபஞ்சமூலம்

C] ஏலாதி

D] திரிகடுகம்

11) பால்பற்றிச் சொல்லா விடுதலும் - இவ்வடியில் பால்பற்றி என்பதன் பொருள் யாது?

A] இனம்பற்றி

B] பகுப்புப்பற்றி

C] ஒருபக்கச் சார்புபற்றி

D] நில்லாமைப்பற்றி

12) வனப்பு - என்னும் சொல்லின் பொருள் யாது?

A] அழகு

B] அறிவு

C] வளமை

D] வழி

13) தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையாக உள்ள தகுதியும், அவற்றிலும் மிக்க மேன்மை உடையதுமான மொழியே______எனப்படும்?

A] தனிமொழி

Raed More Model Questions - www.winmeen.com

B] உயர்தனிச் செம்மொழி

C] தமிழ் மொழி

D] செம்மொழி

14) தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல மொழியே______எனப்படும்?

A] தமிழ் மொழி

B] உயர் செம்மொழி

C] உயர்தனிச் செம்மொழி

D] தனிமொழி

15) திருந்திய பண்பும், சீர்திருத்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி, புகல்______என்பது கீழ்க்கண்ட எம்மொழியின் இலக்கணம் என்று பரிதிமாற்கலைஞர் கூறுகிறார்?

A] செம்மொழி

B] தமிழ்மொழி

C] தனிமொழி

D] உயர்மொழி

விடைகள் - திரிகடுகம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 4 | C | 7 | A | 10 | D | 13 | B |
| 2 | B | 5 | D | 8 | C | 11 | C | 14 | D |
| 3 | A | 6 | B | 9 | B | 12 | A | 15 | A |

## 7 - [அ] திருவாரூர் நான்மணிமாலை

1) 'என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

B] முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

C] திருவாரூர் நான்மணிமாலை

D] மதுரைக்கலம்பகம்

2) திருவாரூர் நான்மணிமாலை என்னும் நூலை பாடிய புலவர் யார்?

A] நாதமுனிகள்

B] குமரகுருபரர்

C] மீனாட்சி சுந்தரம் பிள்ளை

D] காளமேகப்புலவர்

3) எந்த கிழவிக்காக இறைவன் மண் சுமந்து மன்னனிடம் அடிபட்டார்?

A] சகுந்தலா

B] கோசலை

C] மந்தரை

D] வந்தி

4) இறைவன் கிழவிக்காக மண்சுமந்து கீழ்க்கண்ட எந்த மன்னனிடம் அடி வாங்கினார்?

A] பாண்டியன்

B] சோழன்

C] சேரன்

D] நாயக்கர்கள்

5) 'என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள தென்கமலை என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எந்த ஊரைக் குறிக்கிறது?

A] திருப்பெருந்துறை

B] திருவழுந்தூர்

C] திருவாரூர்

D] திருக்கோவிலூர்

6) 'என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள பூங்கோயில் என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எதைக் குறிப்பதாக குமரகுருபரர் கூறுகிறார்?

A] திருவாரூர்க் கோவிலின் தன்மை

B] திருவாரூர்க் கோவிலின் சிறப்பு

C] திருவாரூர்க் கோவிலின் அமைவிடம்

D] திருவாரூர்க் கோவிலின் பெயர்

7) 'புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள புண்ணியனார் என்னும் சொல்லானது கீழ்க்கண்ட யாரைக் குறித்தது?

A] பாண்டிய மன்னன்

B] இறைவன்

C] முனிவர்கள்

D] வந்திக் கிழவி

8) குமரகுருபரர் அவர்கள் பிறந்த ஊர் யாது?

A] திருப்பெருந்தூர்

B] திருவெண்ணெய்நல்லூர்

C] திருவைகுண்டம்

D] திருநாவலூர்

9) குமரகுருபரர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று கூறப்படுகிறது?

A] பதினேழாம் நூற்றாண்டு

B] பதினாறாம் நூற்றாண்டு

C] பதினைந்தாம் நூற்றாண்டு

D] பதினெட்டாம் நூற்றாண்டு

10) திருவாரூர் நான்மணிமாலை - என்னும் நூலில் கீழ்க்கண்ட எந்த வகையான பாடல்கள் மட்டும் இடம்பெறவில்லை?

A] கட்டளைக் கலித்துறை

B] வஞ்சித்துறை

C] வெண்பா

D] ஆசிரிய விருத்தம்

11) நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் கீழ்க்கண்டவற்றில் எவற்றில் சேர்ந்தது?

A] சங்கஇலக்கியம்

B] பதினெண்கீழ்க்கணக்கு

C] காப்பியம்

D] சிற்றிலக்கியம்

12) மண் சுமந்தார் - எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

A] சிவபெருமான்

B] நான்முகன்

C] திருமால்

D] தேவேந்திரன்

13) குமரகுருபரர் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] கந்தர் கலிவெண்பா

B] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

C] மதுரைப் பதிற்றுப்பத்தாந்தி

D] மதுரைக்கலம்பகம்

14) திருவாரூரில் எழுந்தெருளியுள்ள இறைவனின் பெயர் யாது?

A] திந்திணேஸ்வரர்

B] தியாகராசர்

C] கபாலீஸ்வரர்

D] கைலாசநாதர்

விடைகள் - (அ) திருவாரூர் நான்மணிமாலை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | B | 3 | D | 4 | A | 5 | C |
| 6 | D | 7 | B | 8 | C | 9 | A | 10 | B |
| 11 | D | 12 | A | 13 | C | 14 | B | | |

## (ஆ) மெய்ப்பொருள் கல்வி

1) ‘தலைசீவிப் பள்ளிக்கே ஓடு - நல் தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு’ - என்ற பாடல் மூலம் கல்வியின் சிறப்பை கூறிய புலவர் யார்?

A] வாணிதாசன்

B] பாரதிதாசன்

C] நா.காமராசன்

D] வல்லிக்கண்ணன்

2) தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு - இவ்வடியில் பதுமை என்னும் சொல் உணர்த்தும் பொருள் எது?

A] புதுமை

B] பத்து

C] உருவம்

D] அழகுசிலை

3) கீழ்க்கண்டவற்றில் யாரை கவிஞர் கண்கொடுப்பவர் என்று கூறுகிறார்?

A] கல்வியாளர்

B] தலைமையானவர்

C] கற்றலை கேட்பவர்

D] கற்பிப்பவர்கள்

4) கணக்காயர் உரையினில் இருசெவி சேர - என்ற வரியில் இடம்பெற்றுள்ள கணக்காயர் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] கணக்கர்

B] ஆசிரியர்

C] அலுவலர்

D] தலைவர்

5) நம் வாழ்க்கையில் எது உற்றத்துணையாகவும் உறுதுணையாகவும் விளங்குவதாக வாணிதாசன் கூறுகிறார்?

A] செல்வம்

B] பெற்றோர்

C] கல்வி

D] வீரம்

6) வாணிதாசன் அவர்களின் இயற்பெயர் யாது?

A] எத்திராசலு

B] துரைமாணிக்கம்

C] அரங்கநாதன்

D] இராமகிருஷ்ணன்

7) வாணிதாசன் அவர்கள் பிறந்த ஊர் யாது?

A] சதுரங்கப் பட்டினம்

B] கூனிமேடு

C] காலாபட்டு

D] வில்லியனூர்

8) ‘கவிரேறு’, ‘பாவலர் மணி’ - ஆகிய சிறப்பு பட்டங்களை பெற்ற புலவர் யார்?

A] பாரதிதாசன்

B] வாணிதாசன்

C] முடியரசன்

D] கண்ணதாசன்

9) தமிழகத்தின் 'வோர்ட்ஸ்வொர்த்' எனப் புகழப்படுபவர் யார்?

A] கம்பதாசன்

B] வண்ணதாசன்

C] வாணிதாசன்

D] பாரதிதாசன்

10) கீழ்க்கண்ட எந்த இரு மொழிகளில் வாணிதாசனின் பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?

A] ஆங்கிலம், உருசியம்

B] பிரெஞ்சு, ஆங்கிலம்

C] இலத்தீன், உருசியம்

D] தெலுங்கு, கன்னடம்

11) வாணிதாசன் அவர்கள் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1911 - 1970

B] 1914 - 1973

C] 1918 - 1977

D] 1915 - 1974

12) வாணிதாசன் அவர்கள் கீழ்க்கண்ட யாரிடம் தொடக்க கல்வி பயின்றார்?

A] இலக்குவனார்

B] திரு.வி.க

C] பாரதிதாசன்

D] வல்லிக்கண்ணன்

13) சாகித்ய அகாதெமி வெளியிட்ட கீழ்க்கண்ட எந்த தொகுப்பு நூலில் வாணிதாசன் அவர்களின் கவிதை இடம்பெற்றுள்ளன?

A] தமிழ்க் கவிதைக் களஞ்சியம்

B] புதுத்தமிழ்க் கவிமலர்கள்

C] குழந்தை இலக்கியம்

D] எழிலோவியம்

14) தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட கீழ்க்கண்ட எந்த தொகுப்பு நூலில் வாணிதாசன் அவர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன?

A] குழந்தை இலக்கியம்

B] புதுத்தமிழ்க் கவிதைக் களஞ்சியம்

C] வாணிதாசன் கவிதை நூல்கள்

D] தமிழ்க் கவிதைக் களஞ்சியம்

15) 'தமிழ் - பிரெஞ்சு கையகர முதலி'யை வெளியிட்டவர் யார்?

A] வாணிதாசன்

B] பாரதிதாசன்

C] சுரதா

D] வண்ணதாசன்

16) கீழ்க்கண்டவற்றில் யார் வாணிதாசன் அவர்களுக்கு செவாலியர் விருதினை வழங்கியவர்?

A] பிரெஞ்சு கல்வி அமைச்சர்

B] பிரெஞ்சு முதல் அமைச்சர்

C] பிரெஞ்சு குடியரசுத் தலைவர்

D] பிரெஞ்சு பல்கலைக்கழகத் தலைவர்

17) கீழ்க்கண்ட எந்த இதழானது பாரதிதாசன் அடியொட்டி பாடிய கவிஞர்களை 'பாரதிதாசன் பரம்பரை' என்னும் தலைப்பில் அறிமுகப்படுத்தியது?

A] காவியம் இதழ்

B] பொன்னி இதழ்

C] தலைவன் இதழ்

D] விண்மீன் இதழ்

18) 'திருவாணிதாசர் ஒரு பெரும் உலகக் கவிஞர் ஆதல் வேண்டும்' - என்று வாணிதாசரை புகழ்ந்தவர் யார்?

A] அண்ணா

B] மயிலை சிவமுத்து

C] பாரதிதாசன்

D] திரு.வி.க

19) வாணிதாசரை 'தமிழ்நாட்டு தாகூர்' - என அழைத்தவர் யார்?

A] பெரியார்

B] சுரதா

C] மயிலை சிவமுத்து

D] திரு.வி.க

20) வாணிதாசன் இயற்றிய 'தலைசீவிப் பள்ளிக்கே ஓடு - நல் தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு' - என்ற பாடலானது கல்வி எனும் பகுதியில் கீழ்க்கண்ட எந்த தலைப்பின் கீழ் பாடப்பட்டுள்ளது?

A] பள்ளிச் சிறுவர்

B] மெய்ப்பொருள் கல்வி

C] கட்டாயக் கல்வி

D] படிக்க வேண்டும்

21) 'நம் பாடப்பகுதியின் பாடல் அமைந்துள்ள மெய்ப்பொருள் கல்வி எனும் பகுதியானது வாணிதாசன் இயற்றிய கீழ்க்கண்ட எந்த நூலிருந்து எடுக்கப்பட்டது?

A] குழந்தை இலக்கியம்

B] இன்ப இலக்கியம்

C] எழிலோவியம்

D] வாணிதாசன் கவிதைகள்

22) வாணிதாசன் அவர்களின் 'புனை பெயர்' யாது?

A] அரங்க

B] சாமி

C] ரமி

D] ராசலு

விடைகள் - மெய்ப்பொருள் கல்வி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | A | 11 | D | 16 | C | 21 | A |
| 2 | C | 7 | D | 12 | C | 17 | B | 22 | C |
| 3 | D | 8 | B | 13 | A | 18 | D | | |
| 4 | B | 9 | C | 14 | B | 19 | C | | |
| 5 | C | 10 | A | 15 | A | 20 | B | | |

Raed More Model Questions - www.winmeen.com

## 8 - (அ) ஏர்முனை

1) 'ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லை' - என்ற பாடலை பாடியவர் யார்?

A] கண்ணதாசன்

B] பாரதிதாசன்

C] அ.மருதகாசி

D] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

2) 'சேம்முற நாள்முழுதும் உழைப்பத னாலே' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள சேமம் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] நலம்

B] மழை

C] நாடு

D] நெற்றி

3) பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக - என்ற வரியில் இடம்பெற்றுள்ள முட்டு என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மழை

B] நாடு

C] தடுப்பு

D] குவியல்

4) கீழ்க்கண்டவற்றில் யார் 'திரைக்கவித் திலகம்' என அழைக்கப்படுகிறார்?

A] கல்யாணசுந்தரம்

B] அ.மருதகாசி

C] கவிமணி

D] பாரதிதாசன்

5) கீழ்க்கண்டவற்றில் எது இந்த உலகில் நிகரற்ற தொழில் என்று அ.மருதகாசி கூறுகிறார்?

A] கல் உடைத்தல்

B] கற்பித்தல் தொழில்

C] உழவர் தொழில்

D] திருட்டு தொழில்

6) உழவர்கள் கீழ்க்கண்டவற்றில் எவற்றை செல்வமாக கருதுகின்றனர் என்று அ.மருதகாசி அவர்கள் கூறுகின்றார்?

A] நெற்கதிர்கள்

B] மழை

C] நிலம்

D] நாடு

7) வளர்ந்து விட்ட நெற்கதிரை அ.மருதகாசி அவர்கள் கீழ்க்கண்ட எவற்றோடு உவமிக்கிறார்?

A] சூரியன்

B] முத்து

C] வியர்வை

D] பருவப்பெண்

8) அ.மருதகாசி அவர்கள் பிறந்த ஊர் எது?

A] சங்கரன் கோவில்

B] மேலக்குடிக்காடு

C] மலைக்கோட்டை

D] நாயக்கன்பாளையம்

9) அ.மருதகாசி அவர்களின் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1917 - 1986

B] 1919 - 1988

C] 1920 - 1989

D] 1921 - 1990

10) 'ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லை' - எனத் தொடங்கும் பாடலானது 'திரைக்கவித் திலகம் அ.மருதகாசி பாடல்கள்' என்னும் நூலில் கீழ்க்கண்ட எந்த தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது?

A] சமூகம்

B] மனிதன்

C] தேசம்

D] விவசாயி

11) கீழ்க்கண்டவற்றில் யார் 'மெட்டுக்கு விரைந்து பாடல் எழுதும் ஆற்றல்' பெற்றவர் என்று கூறப்படுபவர்?

A] உடுமலை நாராயணகவி

B] கவிஞர் வாலி

C] பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

D] அ.மருதகாசி

Raed More Model Questions - www.winmeen.com

12) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது அ.மருதகாசின் திரை இசைப் பாடல்களும் புத்தகங்களும் தமிழக அரசினால் அரசுடமையாக்கப்பட்டன?

A] 2002

B] 2007

C] 2005

D] 2006

13) கீழ்க்கண்ட எந்த கவிஞர் மரபியல் இலக்கிய இயல்களையும், தமிழ் மண்ணின் கலாச்சார பெருமிதங்களையும் திரைப்பாடல்களில் வெளிப்படுத்த தவறாத கவிஞர்' - என்று பாராட்டப்படுகிறார்?

A] பாரதிதாசன்

B] பட்டுக்கோட்டையார்

C] அ.மருதகாசி

D] நாராயணகவி

14) அ.மருதகாசி அவர்களுக்கு 'திரைக்கவித் திலகம்' - என்ற பட்டத்தை அளித்தவர் யார்?

A] குடந்தை வாணி விலாச சபையினர்

B] கரந்தை தமிழ்ச்சங்க சபையினர்

C] மதுரை தமிழ்ச்சங்க சபையினர்

D] சென்னை தமிழ்ச்சங்க சபையினர்

15) அ.மருதகாசி அவர்களின் கீழ்க்கண்ட எந்த பாடலானது தமிழக அரசின் பரிசைப் பெற்றது?

A] ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவுமில்லை

B] சமரசம் உலாவும் இடமே

C] மருதமலை மாமணியே முருகேயே

D] கடவுள் என்னும் முதலாளி

விடைகள் - (அ) ஏர்முனை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 4 | B | 7 | D | 10 | A | 13 | C |
| 2 | A | 5 | C | 8 | B | 11 | D | 14 | A |
| 3 | D | 6 | A | 9 | C | 12 | B | 15 | C |

Raed More Model Questions - www.winmeen.com

## (ஆ) அம்மானை

1) 'அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை' - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] திருவரங்கக் கலம்பகம்

B] தில்லைக் கலம்பகம்

C] மதுரைக் கலம்பகம்

D] திருச்செந்திற் கலம்பகம்

2) 'ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை, அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை' - என்ற வரிகளானது திருச்செந்திற் கலம்பகத்தில் கீழ்க்கண்ட எந்த கலம்பக உறுப்பில் அமைந்துள்ளது?

A] புயவகுப்பு

B] அம்மானை

C] மதங்கம்

D] கைக்கிளை

3) திருச்செந்திற் கலம்பகம் - என்னும் நூலை எழுதியவர் யார்?

A] சுவாமிநாத தேசிகர்

B] புகழேந்தி புலவர்

C] பவணந்தி முனிவர்

D] சிவஞான முனிவர்

4) சுவாமிநாத தேசிகர் அவர்களின் சிறப்பு பெயர் யாது?

A] கைலாசநாத தேசிகர்

B] மயிலேறும் பெருமாள்

C] ஈசான தேசிகர்

D] சிவமைந்த முனிவர்

5) சுவாமிநாத தேசிகர் அவர்கள் கீழ்க்கண்ட யாரிடம் கல்வி பயின்றார்?

A] மயிலேறும் பெருமாள்

B] சிவஞான முனிவர்

C] சபாபதி முதலியார்

D] அம்பலவாண தேசிகர்

6) கீழ்க்கண்ட யாருக்கு சுவாமிநாத தேசிகர் அவர்கள் தொண்டராக இருந்தார்?

A] குன்றக்குடி அடிகளார்

B] தில்லைநாயகப் பெருமாள்

C] மயிலேறும் பெருமாள்

D] அம்பலவாண தேசிகர்

7) அம்பலவாண தேசிகர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த இடத்தில் ஞானதேசிகராய் பணியாற்றினார்?

A] திருவாரூர்

B] திருப்பெரும்பத்தூர்

C] திருவாவடுதுறை

D] திருநள்ளாறு

8) கலம்பகமானது மொத்தம் எத்தனை உறுப்புகளைக் கொண்டது?

A] பதினெண் உறுப்புகள்

B] பன்னிரெண்டு உறுப்புகள்

C] பதினைந்து உறுப்புகள்

D] பதினேழு உறுப்புகள்

9) 'ஒளிபொருந்திய நெடிய வேலை ஏந்திய வீரன்' - என்று சுவாமிநாத தேசிகர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த முருகப்பெருமானை குறிப்பிடுகிறார்?

A] பழநிமலை முருகன்

B] திருச்செந்தூர் முருகன்

C] திருப்பரங்குன்ற முருகன்

D] சுவாமிமலை முருகன்

10) பெண்கள் மூவர் வட்டமாக உட்கார்ந்து கொண்டு கல்லை மேலெறிந்து பிடித்தாடுவது____விளையாட்டு எனப்படும்?

A] ஓரையாடுதல்

B] மடலேறுதல்

C] புயவகுப்பு

D] அம்மானை

11) மறைகளைப் படைத்தவனாகவும், மறையை அறிந்தவனாகவும் இருந்தும் பிரணவ பொருளை பற்றி அறியாமல் இருந்தார் - என்று கீழ்க்கண்டவற்றில் யாரைக் குறிப்பிடுகிறார்?

A] தேவர்கள்

B] திருமால்

C] நான்முகன்

D] முருகன்

12) அம்மானை என்பது______விளையாடும் விளையாட்டு ஆகும்?

A] பெண்கள்

B] ஆண்கள்

C] குழந்தைகள்

D] தேவர்கள்

13) அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம் எது?

A] நான்முகன்

B] முருகன்

C] சிவன்

D] திருமால்

14) முருகனால் சிறையிலடப்பட்டவர் யார்?

A] சிவன்

B] திருமால்

C] நான்முகன்

D] முருகன்

விடைகள் - (ஆ) அம்மானை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 4 | C | 7 | C | 10 | D | 13 | B |
| 2 | B | 5 | A | 8 | A | 11 | C | 14 | C |
| 3 | A | 6 | D | 9 | B | 12 | A | | |

Raed More Model Questions - www.winmeen.com

## 9) - [அ] பொங்கல் வழிபாடு

1) 'நீ தந்த கனி இது, நீ தந்த கரும்பிது' - எனத் தொடங்கும் பாடலை பாடிய புலவர் யார்?

A] வல்லிக்கண்ணன்

B] சுரதா

C] அப்துல் ரகுமான்

D] ந.பிச்சமூர்த்தி

2) 'நீயன்றி மண்ணுண்டோ, விண்ணுண்டோ, ஒளியுண்டோ, நிலவுமுண்டோ' - என்ற வரி மூலம் ந.பிச்சமூர்த்தி அவர்கள் கீழ்க்கண்ட எந்தக் கடவுளை குறிப்பிடுகிறார்?

A] இந்திரன்

B] சூரியன்

C] வருணன்

D] வாயுபகவான்

3) உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்துக்கும் முதல்வனாக கீழ்க்கண்டவற்றில் எது விளங்குவதாக ந.பிச்சமூர்த்தி அவர்கள் கூறுகிறார்?

A] பிரம்மன்

B] சந்திரன்

C] சூரியன்

D] திருமால்

4) இந்த உலகில் காணப்படும் கனிவகைளும் கரும்பும் நெற்கதிர்களும் கீழ்க்கண்ட யாரால் விளைந்தவை என்று ந.பிச்சமூர்த்தி அவர்கள் தம் கவிதையில் குறிப்பிடுகிறார்?

A] சூரியன்

B] விவசாயி

C] இறைவன்

D] மழை

5) யார் இல்லாமல் இந்த உலகில் மண்ணும் விண்ணும் ஒளியும் நிலவும் நீருமில்லை என்று ந.பிச்சமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிறார்?

A] பிரம்மன்

B] சிவன்

C] இந்திரன்

D] சூரியன்

6) ‘கனகப் புரவிமேல் கடுகியே வந்திடு’ - என்ற வரியில் இடம்பெற்றுள்ள கனகம் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] பொன்

B] செல்வம்

C] மண்

D] குதிரை

7) ‘கனகப் புரவிமேல் கடுகியே வந்திடு’ - என்ற வரியில் இடம்பெற்றுள்ள புரவி என்னும் சொல்லின் பொருள் யாது?

A] பசு

B] யானை

C] குதிரை

D] மான்

8) ந.பிச்சமூர்த்தி அவர்களின் இயற்பெயர் யாது?

A] வேங்கடரத்தினம்

B] வேங்கடமகாலிங்கம்

C] வெங்கடாச்சலம்

D] துரைமாணிக்கம்

9) ந.பிச்சமூர்த்தி அவர்கள் பிறந்த ஊர் யாது?

A] கும்பகோணம்

B] வில்லியனூர்

C] இராமநாதபுரம்

D] வேதாரண்யம்

10) ந.பிச்சமூர்த்தி அவர்களின் பிறப்பு இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1900 - 1975

B] 1901 - 1977

C] 1900 - 1976

D] 1908 - 1980

11) கீழ்க்கண்ட எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை ந.பிச்சமூர்த்தி அவர்கள் வழக்குரைஞராக பணியாற்றினார்?

A] 1918 - 1934

B] 1954 - 1976

C] 1938 - 1954

D] 1924 - 1938

12) கீழ்க்கண்ட எந்த ஆண்டில் ந.பிச்சமூர்த்தி அவர்கள் கோவில் நிர்வாக அலுவலராக பணியாற்றினார்?

A] 1924 - 1938

B] 1938 - 1954

C] 1942 - 1958

D] 1936 - 1942

13) கீழ்க்கண்ட யாருடைய கவிதைகள் இருபதாம் நூற்றாண்டின் இக்கால இலக்கியத் துறைக்குப் புதிய சிறப்புகளைச் சேர்த்திருக்கின்றன?

A] வைரமுத்து

B] மு.மேத்தா

C] சி.சு.செல்லப்பா

D] ந.பிச்சமூர்த்தி

14) கீழ்க்கண்ட யாருடை படைப்புகள் பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை என்று கூறப்படுகிறது?

A] இரா.மீனாட்சி

B] தருமு.சிவராமு

C] ந.பிச்சமூர்த்தி

D] நா.காமராசன்

15) 'ந.பிச்சமூர்த்தி கவிதைகள்' - என்னும் நூலில் உள்ள மொத்த கவிதைகளின் எண்ணிக்கை யாது?

A] 83

B] 85

C] 82

D] 84

16) 'நீ தந்த கனி இது, நீ தந்த கரும்பிது' - எனத் தொடங்கும் பாடலானது ந.பிச்சமூர்த்தி எழுதிய கவிதைகளில் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

A] கிளிக்கூண்டு

B] பொங்கல் வழிபாடு

C] கொம்பும் கிணறும்

D] ஒளியின் அழைப்பு

17) பொங்கல் வழிபாடு என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள 'நீ தந்த கனி இது, நீ தந்த கரும்பிது' எனத் தொடங்கும் பாடலானது ந.பிச்சமூர்த்தி எழுதிய கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] வழித்துளை

B] பூக்காரி

C] கிளிக்குஞ்சு

D] ந.பிச்சமூர்த்தி கவிதைகள்

18) கீழ்க்கண்டவற்றில் யார் 'புதுக்கவிதை இயக்கத்தின் விடிவெள்ளி' என்று அழைக்கப்படுகிறார்?

A] அப்துல் ரகுமான்

B] ஈரோடு தமிழன்பன்

C] ந.பிச்சமூர்த்தி

D] கலாப்ரியா

19) தத்துவார்த்தம் பிணைந்த கதை சொல்லும் முறையினை தமிழுக்கு அறிமுகம் செய்த புலவர் யார்?

A] வைரமுத்து

B] ந.பிச்சமூர்த்தி

C] மு.மேத்தா

D] கவிமணி

விடைகள் - (அ) பொங்கல் வழிபாடு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 5 | D | 9 | A | 13 | D | 17 | D |
| 2 | B | 6 | A | 10 | C | 14 | C | 18 | C |
| 3 | C | 7 | C | 11 | D | 15 | A | 19 | B |
| 4 | A | 8 | B | 12 | B | 16 | B | | |

[ஆ] உழவின் சிறப்பு

1) 'மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை' - எனத் தொடங்கும் பாடலை பாடிய கவிஞர் யார்?

A] புகேழந்தி புலவர்

B] ஔவையார்

C] கபிலர்

D] கம்பர்

2) 'மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள மேழி என்னும் சொல்லின் பொருள் யாது?

A] நிலம்

B] கலப்பை

C] மேடு

D] மழை

3) 'ஆழி தரித்தே அருளும்கை' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள ஆழி என்னும் சொல்லின் பொருள் யாது?

A] கணையாழி

B] சிலம்பு

C] மோதிரம்

D] தோடு

4) காக்கும் காரளர் கை - என்ற வரியில் இடம்பெற்றுள்ள காராளர் என்னும் சொல் மூலம் கீழ்க்கண்ட யாரைக் குறிப்பிடுகிறார்?

A] உழவர்

B] மன்னர்

C] ஜமீன்தார்

D] தேவர்கள்

5) எந்த தொழில் செய்வோரின் கைகளே என்றென்றும் உயிர்களுக்கு அடைக்கலம் அளிக்கின்ற கைகளாம் என்று கம்பர் கூறுகிறார்?

A] அரசாங்கம்

B] வேளாண்மை

C] கற்பித்தல்

D] பொற்கொல்லன்

6) யாருடைய கைகளானது ஏழை மக்களின் வறுமைத் துன்பமாகிய பசிப்பிணியைப் போக்கும் கைகள் என்று கம்பர் குறிப்பிடுகிறார்?

A] மன்னரின் கைகள்

B] புலவர்களின் கைகள்

C] தானதர்மம் செய்வரின் கைகள்

D] உழவர் கைகள்

7) கம்பர் பிறந்த ஊர் யாது?

A] தேரழுந்தூர்

B] திருமறைக்காடு

C] திருவழுந்தூர்

D] திருநடுவூர்

8) கம்பரை ஆதரித்த வள்ளல் பெயர் யாது?

A] சந்திரன்சுவர்க்கி

B] சடையப்ப வள்ளல்

C] சீதக்காதி வள்ளல்

D] வாலைவாரிதி வள்ளல்

9) கம்பர் இயற்றிய நூல்களில் தவறானது எது?

A] சடகோபரந்தாதி

B] ஏரெழுபது

C] சரஸ்வதி கலம்பகம்

D] திருக்கை வழுக்கம்

10) எந்த நூற்றாண்டு கம்பர் வாழ்ந்த நூற்றாண்டாக கூறப்படுகிறது?

A] பதினைந்தாம் நூற்றாண்டு

B] ஒன்பதாம் நூற்றாண்டு

C] பதினொன்றாம் நூற்றாண்டு

D] பன்னிரண்டாம் நூற்றாண்டு

11) 'மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள வேந்தர் என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மன்னர்

B] அமைச்சர்

C] வள்ளல்

D] உழவர்

12) 'உலகம் என்னும் தேருக்கு உழவனே அச்சாணி' - என்று உழவனின் சிறப்பைக் கூறிய புலவர் யார்?

A] கம்பர்

B] வள்ளுவர்

C] கபிலர்

D] ஒட்டக்கூத்தர்

13) 'நாட்டை ஆட்சி செய்யும் மன்னரின் செங்கோலால் உழவனின் கையில் இருக்கும் ஏர் புடிக்கும் சிறுகோல் தான்' - என்று உழவின் சிறப்பைக் கூறியவர் யார்?

A] வள்ளுவர்

B] கபிலர்

C] கம்பர்

D] இளங்கோவடிகள்

விடைகள் - [ஆ] உழவின் சிறப்பு

Raed More Model Questions - www.winmeen.com

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 2 | B | 3 | C | 4 | A | 5 | B |
| 6 | D | 7 | A | 8 | B | 9 | C | 10 | D |
| 11 | A | 12 | B | 13 | C | | | | |

## 10) முக்கூடற்பள்ளு

1) 'தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்' - எனத் தொடங்கும் பாடலானது இடம்பெற்றுள்ள நூல் எது?

A] முதுமொழிக்காஞ்சி

B] முக்கூடற்பள்ளு

C] சிறுபஞ்சமூலம்

D] சீவகசிந்தாமணி

2) ஊமத்தம் பூவை விரும்பி சூடும் இறைவன் யார்?

A] திருமால்

B] இந்திரன்

C] சிவன்

D] கணபதி

3) எந்த ஊரில் வாய்க்கால்களில் தத்திச்செல்லும் நீரானது முத்துகளால் இடைமறித்து அடைக்கப்படும் என்று புலவர் குறிப்பிடுகிறார்?

A] மருவூர்

B] மருத்தூர்

C] மருவத்தூர்

D] மருதூர்

4) கீழ்க்கண்டவற்றில் யார் மட்டும் கலிப்பு தொழில் செய்பவர்களில் தவறானவர்?

A] வேளாளர்

B] கருமார்

C] கொல்லர்

D] தட்டார்

5) கீழ்க்கண்டவற்றில் மதோன்மத்தர் - என அழைக்கப்படுபவர் யார்?

A] அருகன்

B] பிரம்மன்

C] சிவன்

D] புத்தர்

6) நாடக பாங்கில் அமைந்த முக்கூடற்பள்ளு என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A] என்னாயினர் புலவர்

B] என்னயினாப் புலவர்

C] கன்னாயினாப் புலவர்

D] என்னாயிரப் புலவர்

7) கீழ்க்கண்டவற்றில் எந்த மாவட்டத்தை சேர்ந்த பேச்சு வழக்கை முக்கூடற்பள்ளு என்னும் நூலில் ஆங்காங்கே காணலாம்?

A] திருச்சிராப்பள்ளி

B] திருவண்ணாமலை

C] திருச்செந்தூர்

D] திருநெல்வேலி

8) நீர் நிறைந்த பள்ளமான சேற்றுநிலத்தில் உழவுத்தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுவதாக அமைந்த நூல் எது?

A] பள்ளு

B] கலம்பகம்

C] அம்மானை

D] தூது

9) முக்கூடல் என்னும் சிற்றூரில் கீழ்க்கண்ட எந்த மூன்று ஆறுகள் ஒன்றாக கலக்கின்றன?

A] வைகை, தண்பொருநை, காவேரி

B] காவேரி, பொன்னி, பாலாறு

C] தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு

D] சிற்றாறு, குடந்தை ஆறு, பொன்னி

10) முக்கூடல் என்னும் சிற்றூரானது திருநெல்வேலி மாவட்டத்தின் எந்த திசையில் அமைந்துள்ளது?

A] தென்கிழக்கு

B] வடகிழக்கு

C] வடமேற்கு

D] தென்மேற்கு

11) முக்கூடல் என்னும் சிற்றூரின் வேறு பெயர் யாது?

A] ஆசூர் வடகரை நாடு

B] சீவலமங்கை தென்கரை நாடு

C] மூதூர் வடகரை நாடு

D] மருதூர் தென்கரை நாடு

12) முக்கூடலின் தென்பால் பகுதியில் அமைந்துள்ள பகுதியானது கீழ்க்கண்ட எந்த பெயராக வழங்கப்படுகிறது?

A] ஆசூர் வடகரை நாடு

B] ஆசூர் தென்கரை நாடு

C] சீவலமங்கை தென்கரை நாடு

D] சீவலமங்கை வடகரை நாடு

13) மருதூரில் வீற்றிருக்கும் இறைவனின் பெயர் யாது?

A] மகேஸ்வரன்

B] மதோன்மத்தர்

C] மருதீஸ்வரர்

D] மருதீசர்

14) இறைவன் மருதீசரின் மூத்த மனைவி ஆனவள் கீழ்க்கண்ட எந்த ஊரில் வசிப்பவள் என்று கூறப்படுகிறது?

A] முக்கூடல்

B] மருதூர்

C] சீவலமங்கை

D] திருநெல்வேலி

15) இறைவன் மருதீசரின் இளைய மனைவி வீற்றிருக்கும் இடம் எது?

A] முக்கூடல்

B] மருதூர்

C] ஆதூர்

D] சீவலமங்கை

16) கீழ்க்கண்ட எந்த நூலை கற்பதினால் அக்கால மக்களின் உழவுத்தொழில் பற்றியும் அச்சமுதாயத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்?

A] முகுந்தமாலை

B] முதுமொழிக்காஞ்சி

C] குறிஞ்சிப்பாட்டு

D] முக்கூடற்பள்ளு

17) கீழ்க்கண்டவற்றில் எந்த நூலை கற்பதினால் காளைகளின் பல்வேறு பெயர்கள், விதைகளின் பெயர்கள், மீன்வகைகள் என மருத நிலவளம் பற்றி அறியலாம்?

A] முத்தொள்ளாயிரம்

B] ஆசாராக்கோவை

C] முக்கூடற்பள்ளு

D] திருவள்ளுவமாலை

விடைகள் - முக்கூடற்பள்ளு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | D | 4 | A | 5 | C |
| 6 | B | 7 | D | 8 | A | 9 | C | 10 | B |
| 11 | A | 12 | C | 13 | D | 14 | A | 15 | B |
| 16 | D | 17 | C | | | | | | |

## 11) [அ] - எங்கள் தமிழ்

1) 'இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு இன்பந் தரும்படி' - எனத் தொடங்கும் பாடலை பாடிய கவிஞர் யார்?

A] சுரதா

B] பாரதியார்

C] பாரதிதாசன்

D] கவிமணி

2) 'தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத் தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு' - என்று தமிழின் பெருமையை பாடிய கவிஞர் யார்?

A] பாரதிதாசன்

B] கண்ணதாசன்

C] நாமக்கல் கவிஞர்

D] பாரதியார்

3) 'இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது' - எனத் தொடங்கும் பாடலை பாரதிதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த தலைப்பில் பாடியுள்ளார்?

A] தமிழ்த் தொண்டு

B] எங்கள் தமிழ்

C] விடுதலை வேட்கை

D] இனிய தமிழ்மொழி

4) எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் பாரதிதாசன் பாடிய 'தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு' - என்ற பாடலானது அவர் எழுதிய கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] சேர தாண்டவம்

B] குறிஞ்சித் திட்டு

C] தமிழியக்கம்

D] பாரதிதாசன் கவிதைகள்

5) பாரதிதாசன் அவர்களின் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1982 - 1963

B] 1891 - 1964

C] 1894 - 1965

D] 1891 - 1963

6) தமிழ் எங்கள்_______என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

A] உயிர்

B] மொழி

C] உறவு

D] உணர்வு

7) பாரதிதாசன் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பாண்டியன் பரிசு

B] குடும்ப விளக்கு

Raed More Model Questions - www.winmeen.com

C] குறிஞ்சிப்பாட்டு

D] அழகின் சிரிப்பு

8) 'நனியுண்டு நணியுண்டு காதல் - தமிழ்' - என்ற வரியில் இடம்பெற்றுள்ள நனி என்னும் சொல்லின் பொருள் யாது?

A] உலகம்

B] தகுதி

C] துணை

D] மிகுதி

9) பாரதிதாசன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த மொழியை அறியவில்லை?

A] தமிழ்

B] இலத்தீன்

C] பிரெஞ்சு

D] ஆங்கிலம்

விடைகள் - எங்கள் தமிழ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 2 | A | 3 | B | 4 | D | 5 | B |
| 6 | A | 7 | C | 8 | D | 9 | B | | |

## [ஆ] சீவகசிந்தாமணி

1) 'வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு' - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] சீவகசிந்தாமணி

B] சிலப்பதிகாரம்

C] மணிமேகலை

D] வளையாபதி

2) சீவகசிந்தாமணி - என்னும் நூலை எழுதியவர் யார்?

A] இளங்கோவடிகள்

B] திருத்தக்கதேவர்

C] சீத்தலைச்சாத்தனார்

D] தோலாமொழித்தேவர்

3) மலையை விட்டு வெண்மேகம் நகர்வது பாம்பு தோலுரிப்பதனை போன்று இருக்கிறது - என்று தன் கவிதையை உவமையாக கூறிய புலவர் யார்?

A] நக்கீரர்

B] மதுரை கூடலூர் கிழார்

C] இளங்கோவடிகள்

D] திருத்தக்கதேவர்

4) கீழ்க்கண்டவற்றில் எது தோலுரிக்கப்பட்ட பாம்பு போன்று இருப்பதாக திருத்தக்கதேவர் தன் கவிதையில் குறிப்பிடுகிறார்?

A] வெண்மேகம்

B] அருவி

C] மலை

D] வானம்

5) ‘வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு’ - என்னும் சொல்லில் இடம்பெற்றுள்ள வரை என்னும் சொல்லின் பொருள் யாது?

A] மலை

B] வானம்

C] மத்தளம்

D] தேன்

6) தாழ்ந்து வீழ்ந்தவை முழவின் ததும்பின் மதுகரம் பாடச் - என்னும் வரியில் இடம்பெற்றுள்ள முழவு என்னும் சொல்லின் பொருள் யாது?

A] வானம்

B] மலை

C] ஒளி

D] மத்தளம்

7) திருத்தக்கதேவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த அரசர் குலத்தில் பிறந்தவர் என்று கூறப்படுகிறார்?

A] சேரர்

B] சோழர்

C] பாண்டியர்

D] களப்பிரர்

8) திருத்தக்கதேவர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த மதத்தை சேர்ந்தவர் ஆவார்?

A] சமணம்

B] சைவம்

C] வைணவம்

D] பௌத்தம்

9) திருத்தக்கதேவர் பாடிய மற்றொரு நூல் எது?

A] பரிவிருத்தம்

B] கரிவிருத்தம்

C] நரிவிருத்தம்,

D] கிளிவிருத்தம்

10) ‘வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுஞ் பெருவரை பெரும்பாம்பு - எனத் தொடங்கும் பாடலானது சீவகசிந்தாமணி நூலில் கீழ்க்கண்ட எந்த கலம்பகத்தில் இடம்பெற்றுள்ளது?

A] விமலையார் இலம்பகம்

B] குணமாலையார் இலம்பகம்

C] பதுமையார் இலம்பகம்

D] கனகமாலையார் இலம்பகம்

11) கனகமாலையார் இலம்பகமானது சீவகசிந்தாமணி என்னும் நூலில் எத்தனையாவது இலம்பகமாக இடம்பெற்றுள்ளது?

A] 6 வது இலம்பகம்

B] 8 வது இலம்பகம்

C] 7 வது இலம்பகம்

D] 10 வது இலம்பகம்

12) கீழ்க்கண்ட எந்த நூலானது விருத்தப்பாக்களால் ஆன முதல் தமிழ்க்காப்பியம் என அழைக்கப்படுகிறது?

A] சிலப்பதிகாரம்

B] சீவகசிந்தாமணி

C] குண்டலகேசி

D] நரிவிருத்தம்

13) ஐம்பெருங்காப்பியங்களில் 'காலத்தால் முதன்மையான காப்பியம்' என்ற பெருமையை பெற்றுள்ள நூல் எது?

A] சீவகசிந்தாமணி

B] சிலப்பதிகாரம்

C] வளையாபதி

D] மணிமேகலை

14) ஐம்பெருங்காப்பிய நூல்களில் கீழ்க்கண்ட எந்த காப்பியமானது சத்திர சூடாமணி, சத்ய சிந்தாமணி என்னும் வடமொழி நூல்களை தழுவி எழுதப்பட்டுள்ளது?

A] மணிமேகலை

B] வளையாபதி

C] குண்டலகேசி

D] சீவகசிந்தாமணி

15) காப்பியங்களின் உட்பிரிவிற்கு இலம்பகம் என பெயரிட்ட புலவர் யார்?

A] தோலாமொழித்தேவர்

B] இளங்கோவடிகள்

C] திருத்தக்கதேவர்

D] சீத்தலைச்சாத்தனார்

16) 'உலக வாழ்வையே பெரிதென நம்பி இறைவனைக் கருதாதரர் வாழ்க்கை பயனிலா வாழ்க்கை' என்னும் கருத்தமைய ஒரு தேவார பாட்டில் திருத்தக்கதேவர் இயற்றிய நரிவிருத்தம் என்னும் நூலை குறிப்பிட்ட சமயக்குரவர் யார்?

A] திருஞானசம்பந்தர்

B] திருநாவுக்கரசர்

C] சுந்தரர்

D] மாணிக்கவாசகர்

17) சீவகசிந்தாமணி என்னும் காப்பியமானது கிரேக்க மொழியில் உள்ள இலியட், ஒடிசி காப்பியங்களுக்கு இணையானது என இக்காப்பியத்தை பாராட்டிய வெளிநாட்டு அறிஞர் யார்?

A] ஜி.யூ.போப்

B] வீரமாமுனிவர்

C] கால்டுவெல்

D] எல்லீஸ் துரை

18) திருத்தக்கதேவரை 'தமிழ்ப் புலவர்களில் தலைமை சான்றவர்' என புகழ்ந்தவர் யார்?

A] டாக்டர்.கிரௌல்

B] ஜி.யூ.போப்

C] வீரமாமுனிவர்

D] கால்டுவெல்

19) கீழ்க்கண்ட எந்த நூலானாது முதன் முதலில் விருத்தம் என்னும் புதுச்செய்யுள் வகையில் எழுதப்பட்டது?

A] மணிமேகலை

B] உதயகுமாரகாப்பியம்

C] நரிவிருத்தம்

D] சீவகசிந்தாமணி

20) 'மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாட்டுக்கள் கொண்ட ஒரு பெருங்காப்பியத்தை அந்த விருத்தம் என்னும் புதிய செய்யுள் வகையிலேயே முழுதும் பாடி முடித்தார்' - என்று திருத்தக்கதேவரின் சிறப்பினை கூறியவர் யார்?

A] தந்தை பெரியார்

B] மு.வரதராசனார்

C] அறிஞர் அண்ணா

D] திரு.வி.க

21) விருத்தம் - என்பது கீழ்க்கண்ட எத்தனை அடிகளைக் கொண்டது?

A] நான்கு அடிகள்

B] மூன்று அடிகள்

C] எட்டு அடிகள்

D] ஐந்து அடிகள்

22) சீவகசிந்தாமணி நூலின் வேறு பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] மணநூல்

B] காமநூல்

C] குணநூல்

D] முடிபொருள் தொடர் நிலைச்செய்யுள்

23) கீழ்க்கண்ட எந்த புலவர் சீவகசிந்தாமணி என்னும் நூலை முடிபொருள் தொடர் நிலைச்செய்யுள் - என்று சிறப்பு பெயர் கொண்டு அழைத்தார்?

A] இளம்பூரனார்

B] பேராசிரியர்

C] நச்சினார்க்கினியார்

D] அடியார்க்கு நல்லார்

24) ‘சிந்தாமணியிலும் ஓர் அகப்பை முகந்து கொண்டேன்’ - என்று கூறிய புலவர் யார்?

A] கபிலர்

B] கம்பர்

C] பரணர்

D] ஒட்டக்கூத்தர்

25) திருத்தக்கதேவர் அவர்கள் சீவகசிந்தாமணி என்னும் நூலை எத்தனை நாட்களில் எழுதி முடித்ததாக கூறப்படுகிறது?

A] 8 நாள்கள்

B] 12 நாள்கள்

C] 13 நாள்கள்

D] 10 நாள்கள்

விடைகள் - சீவகசிந்தாமணி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | D | 11 | C | 16 | B | 21 | A |
| 2 | B | 7 | B | 12 | B | 17 | A | 22 | C |
| 3 | D | 8 | A | 13 | A | 18 | C | 23 | D |
| 4 | C | 9 | C | 14 | D | 19 | D | 24 | B |
| 5 | A | 10 | D | 15 | C | 20 | B | 25 | A |

Raed More Model Questions - www.winmeen.com

Raed More Model Questions - www.winmeen.com

Raed More Model Questions - www.winmeen.com

நன்றி - கோ.பழனி முருகன்

Raed More Model Questions - www.winmeen.com